1979 நவம்பர் 9]

மேலும் தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 6) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 19/1979) ஆய்வு செய்யப்பெற்று பரிந்துரைகள் எதுமின்றி திருப்பி அனுப்பப் பெற்றுள்ளது என்றும் மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது.

(1) தகவல் கோரல்—தொடர்ச்சி.

(இ) ஒலிபெருக்கி அமைப்பு குறித்து.

திரு. மு. அம்பிகாபதி: பாயின்ட் ஆப் ஆர்டர். எங்கள் பக்கத்தில் மைக்கில் பேசுவது சிரமமாக இருக்கிறது. அங்கு நான்கு பேர்களுக்கு இரண்டு இருக்கின்றன, இங்கே நான்கு பேர்களுக்கு ஒன்றுதான் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த அவைக்கு ஒரு கட்டபொம்ம னைப் போன்றவர் அம்பிகாபதி. குரலும் அப்படித்தான். உங்கள் குரல் அதிகமாகக் கேட்கிறது. குறையே இல்லை, அந்த ஒலிபெருக்கியே போதும்.

திரு. க. சுப்பு: வேறு எதை வேண்டுமானாலும் சொல்லுங்கள், கட்ட பொம்மனைக் கேவலப்படுத்தாதீர்கள்.

(ஈ) பெருமழையினால் நெல்லையில் ஏற்பட்டுள்ள விளைவு குறித்து.

திரு. பி. எச். பாண்டியன்: கடந்த மூன்று நாட்களாக பெருமழை காரணமாக சேரன்மாதேவி சட்டமன்றத் தொகுதி நெல்லையிலிருந்து துண்டிக்கப்பட்டிருக்கிறது. சாலைகள் பழுதடைந்திருக்கின்றன. குளங்கள் நிரம்பியிருக்கின்றன. தாமிரபரணியில் பெருவெள்ளம் வந்து ஊர் மக்களிடம் அது பீதியை கிளப்பியிருக்கிறது. ஆகவே, இந்த அரசு நிவாரணப் பணி களை உடனே எடுத்து அங்குள்ள மக்கள் நிவாரணம் பெறுவதற்கு நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இந்த நிலையைக் கவனத்தில் கொண்டு உடனடியாக அங்குள்ள மக்களுக்கு ஏதாவது வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துண்டிக்கப்பட்ட இடங்கள் எல்லாம் திருப்பி துண்டிப்பிலிருந்து சரி செய்யப்பட்டது என்று செய்தி வந்திருக்கிறது. மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலும் உடனடியாக பொது மக்களுக்கு